135

8 பக்கங்கள்

விலை 0—1—3

"UDAYAM" Weekly.

135

19 OCT 1946

# உதயம்

வார வெளியீடு.

ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 1—9—46 விய ஆவணி 16உ ஞாயிறு | இதழ் 5

# முஸ்லிம்களுக்கு சோதனை காலம்

## பிரிட்டிஷ் சர்க்காரின் சதி

### ஜனாப் ஜின்னாவின் ஈத் பெருநாள் அறிக்கை

ஈத்பெரு நாளன்று காயிதே அஃஜம் ஜனாப் ஜின்னா அவர்கள் முஸ்லிம் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது:

இப்புனித நாளன்று எல்லா முஸல்மான்களுக்கும் எல்லா நலமும் மகிழ்வும் உண்டாகவேண்டும் என்று விழைகிறேன்.

புனிதமான ரம்ஸான் மாதம் கடந்து விட்டது இது சோதனையைக் கொடுக்கக்கூடியமாதம். நமது பொறுமையையும் நம்பிக்கையையும் சோதிக்கும் மாதம்.

நமது இலட்சியம் நிறைவேற வேண்டுமானால், எத்தனைய கஷ்டங்களுக்கு தோல்விகளுக்கு இடையூறுகளுக்கு ஆளாகவேண்டும்: எவ்வளவு தியாகம் செய்யவேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் இம்மாதம்.

அதிலும் இந்திய முஸ்லிம்களாகிய நாம் இம்மாதத்திலிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

நாம் இப்பொழுதுதான் உண்மையை உணரத் தலைப்பட்டிருக்கிறோம்.

எனவே, நான் முஸ்லிம் மக்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ஒன்று படுங்கள். நல்லதொரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்பதேயாகும்.

உங்கள் சக்தியனைத்தையும் ஒன்று திரட்டுங்கள்; ஒழுங்கான கட்டுப்பாடான இனமாக. (தேசமாக) திகழுங்கள் எது வரினும் எதிர்த்து நிற்கும் உறுதியைப் பெறுங்கள்.

தியாகம் செய்யாமல் துன்பப் படாமல், சுதந்திரத்தைப் பெற முடியாது என்பதைகவனித்தில் வைக்கவேண்டும் தியாகத்தை விட உண்மையான வழி இல்லை நமது இலட்சியத்தின் குறுக்கே நிற்கும் தடைகளை களைந்தெறியவேண்டும்.

வாழ்க்கைப் போராட்டத்தில் அதாவது, கல்வி, சமூகம், பொருளாதாரம் அரசியல் ஆகிய துறைகளில், கட்டுப்பாடுக் கடங்கிய உயர்ந்தபோர் வீரனைப் போல் ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும், சிறுவரும் சிறுமியும் போராடுவேன் என்ற உறுதியை இப்புனித நாளில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

"இன்று நம்மை இருள் சூழ்ந்திருக்கிறது: பிரிட்டிஷ்சர்க்காரும் வைசிராயும் செய்கிற காரியங்கள் நம்மை திகைக்கச் செய்கின்றன. நமது காரியங்கள் எல்லாம் திருத்திக் கூறப்படுகின்றன. நாம் பயமுறுத்தப் படுகிறோம்.

வைசிராய் தலைகால் தெரியாமல் போகிறார். பொறுப்பற்ற- கவலை யற்ற மாதிரியில் போகிறாரே என்று சொல்லக் கூடிய அளவுக்குப் போய் விட்டார்.

முஸ்லீம்லீக் புறக்கணிக்கப்பட்டு விட்டது: சட்டை பண்ண வில்லை. முஸ்லிம் லீக் மீது பழியைச் சுமத்த பலத்த பிரச்சாரம் நடக்கிறது. உண்மையில் முஸ்லிம் லீக்மீது ஒரு அணு அளவாவது குற்றம் கூறசரியான நியாயமில்லை.

வைசிராயும் பிரிட்டிஷ் சர்க்காரும் காங்கரசிடம் சரணடைந்து விட்டார்கள் வெளியேறிவிட்டோம் அதாவதுஇந்திய சர்க்காரை விட்டு வெளியேறிவிட்டோம் என்று அவர்கள் வெளிப்படையாக சொல்லவேண்டியதுதான் பாக்கி யிருக்கிறது.

இவ் வுபகண்டத்தை பாசிச ஜாதி ஹிந்து காங்கிரஸிடம் ஒப்படைக்கும் நிலைமையிலிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் மக்களுக்கோ பார்லிமெண்டுக்கோ உண்மை நிலை தெரியவில்லை தெரியாமல் செய்யப் பட்டு விட்டது. இதனால் நமக்கு பெரும் அபாயம்.

எனவே, நாம், இந்தச் சமயத்தில் ஒன்று பட்டு ஐக்கியமாக, உறுதியாக எல்லா அடக்கு முறைகளையும் எதிர்த்து நிற்கவேண்டும். நசுக்கப்படுவதிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

10 கோடி முஸ்லிம்களும் ஒன்று பட்டு நிற் போமேயானால், எதிரிகளின் எந்த நடவடிக்கையும் ஆயுதங்களும் நம்மை வீழ்த்திவிடமுடியாது. நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம். நமது இலட்சியமான பாகிஸ்தானை அடைந்தே தீருவோம். பாகிஸ்தன் இல்லையேல் அழிவோம். உறுதி ! உறுதி !! உறுதி !!!

வாதாட வேண்டிய அளவுக்கு நாம் வாதிட்டோம்: காரணத்தை எடுத்துக் காட்டவேண்டிய அளவுக்கு எடுத்துக் காட்டி விட்டோம். எவ்வளவு தூரம் பணிந்து போகவேண்டுமோ அவ்வளவு தூரம் பணிந்து போய் விட்டோம். இவ்வளவும் பயனற்று விட்டது.

இப்பொழுது வாழ்வதா மாழ்வதா என்ற நிலையிலிருக்கிறோம். இந்த நிலையில் நாம் உறுதியுடன் இருக்க வேண்டும். நாம் தைரியமாக போராடவேண்டும்.

இப்போராட்டத்தில் வெற்றித் தோல்வியைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம் தோல்வியோ பின்வாங்குதலோ ஏற் பட்டாலும் மனம் தளரக் கூடாது; வெற்றியைக் கண்டும் அகம கிழ்தல் கூடாது. இலட்சியத்தையடையும் வரைநிதானத்தைக்கைவிடலாகாது.

நமது கோரிக்கை நியாயமானது, புனிதமானது. ஆகவே நாம் தோல்வியடையமாட்டோம்.

முஸ்லிம்கள் ஒவ்வொவரும் முஸ்லிம் லீக்கொடியின் கீழ்ஒன்று பட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். அதிலும் கடந்தசிலமாதங்களாக நாட்டில் நடந்து வரும் நிகழ்ச்சிகளைப் பார்த்தபிறகாவது ஒன்று படவேண்டாமா என்று கேட்கிறேன்.

நமக்குள் போராட்டம் வேண்டாம். ஒரே கொடியின் கீழ் ஒரே மேடையில் நின்று நமது போராட்டத்தை நடத்துவோம்.

நமதுநோக்கம், ஒற்றுமை, நம்பிக்கை, கட்டுப்பாடு என்பவைகளாக இருக்கட்டும்.

நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம். ஆண்டவன் துணை நமக்கு உண்டு.

# அங்கும் இங்கும்

(C. S. சின்னராசு)

ஆள் பிரிட்டானியே! அடக்கு அல்லை, அயலார்க்கு அடிமையாக மாட்டாய் அங்கு. நால் வருணம் உண்டு, நம்பு, நரகம் புகமாட்டாய், இங்கு.

உலகம் அஞ்சுகிறதே! வீர நெபோலியனைக் கண்டு, உள்ளம் கலங்காதே. அஞ்சாமையெனும் ஆயுதத்தின் முன் நெபோலியன் ஓர் துரும்பு. நெல்சன் படையெடுப்பில் நெபோலியன் குற்றவாளி தண்டனை, அதோ தென் அட்லாண்டிக்கில் செயிண்ட் ஹெலினா தீவு. சிறையிடும் மக்கள் அறிவை சிறையிட்ட கொடியோனை அங்கு.

அடக்கு ஆசையை, ஆள்! ஆண்மார்த்திகத்தை ஒழி. உடலை 'படியாய்க் கிடந்து உன்பவள வாய்க் காண்பேனே' என்று கல்லாய்ப் போக கடுந்தவஞ் செய். காண்போர் காலில் விழுவர். காசு பரிக்கலாம். கலங்காதே. மக்கள், மாநிலம் எல்லாம் மாய்கை. இங்கு.

எதிர்த்தவரை எதிர்த்தே வாழ்! சினம்கொள். சீரிப்பாய், மலைகலங்கினும் மனம் கலங்காதே. வாழ்ந்தால் மானத்தோடு வாழ் இன்றேல் இறக்கத் துணிவுகொள். எடு துப்பாக்கியை, எதிரியின் நெஞ்சத்தைக் குறிபார். ஈனரை ஒழி. அவன் இருமாப்பை அடக்கி எடு கல்லறையை, எழுது அவன் வீரத்தை பொன்னெழுத்துக்களால். ஏற்று கொடியை, வாழ்த்தி வணக்கஞ் செய் 'வாழ்க பிராட்டினியே' என்று அங்கு.

'சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழு' எதிர்த்தவரை துதித்துவாழ். கோபம் சண்டாளம் குடும்பம் நாசமானாலும் கொடுப்பதை மறக்காதே. மனத்தில் பயம்வை. மானம் பெரிதல்ல. மாயையாங் கயறுகொண்டு மானிடர்களை மாட்டும் மாயப் பெருமானின் லீலா விநோதங்களில் மயங்கு. எடு, தர்ப்பை புல்லை, புரட்டு, பஞ்சாங்கத்தை. எழுப்பு, சத்திரத்தை. இடு, அன்னத்தை, வளர்த்துவிடு, சோம்பேரி தனத்தை; எழுது தருமசாஸனத்தை, வாழ்த்து, அந்தணரை; வழிபடு பல கோடி கடவுளை. இங்கு

எதிர் வாதம் புரியும் அன்பர்களின் வாதத்தை அமைதியாய் கேள். ஆராய்ச்சியெனும் ஒலைக் கூடத்தில் வை. சிந்தனைக்குச் சரியாயின் தலைவணங்கி ஏற்றுக்கொள். இல்லையாயின் எதிர்வாதம் புரி. உண்மையை நிலை நாட்டு. உளராதே. கடவுள் நம்பிக்கை வை. ஆனால் காலமெல்லாம் அல்ல; கண் சிமிட்டும் நேரம். மனிதன் மாறுகிறான். மாகடல் குறையும்; ஆட்சியும் அதன் சட்டங்களும் மாறும். ஆனால் மார்க்க போதனை மாறுவதில்லை; இது மடமை, அதை உடனே மாற்று. மதம் மனிதனுக்கொரு போதை, போதை மனித முன்னேற்றத்திற்கோர் தடை கல். அங்கு.

எதிரிகளைப் பார்க்காதே. ஆராய்ச்சிக்கு இடங்கொடுக்காதே. கொடுத்தால் நீ ஆண்டவன் விரோதி. சிந்தனைக்குச் செயல்தராதே. சிவபிரான் எதைக் கேட்டாலும் கொடு. எதிரிகளின் முதாமைக் கொளுத்து. உலக முதல் பல்கலைக் கழகமான நலேந்தா பல்கலைக் கழகம் நம்மாற்றுருடையது, கொளுத்து; பார்லிமெண்ட் கட்டடமான ரீச்ஸ்டாக் கட்டடத்தை கொளுத்து. தமிழர் நாகரிகச் சுவடிகளை ஆடி பதினெட்டாம் பெருக்கில் விடு. கருஞ் சட்டை படையினரின் படைவீடாம் பந்தலைக் கொளுத்து. மதம் மனிதனுக்கு மார்க்க நீதி. மதம் பரமபதம் போகும் பாதை, பக்தர்கள் பாத தூளி படபட நீ தூய்மையாவாய். வாழ்வை நம்பாதே. இங்கு.

எதையும் எடுத்தவுடனே நம்பாதே. ஏன்? என்று கேள். இரட்டை மாட்டு வண்டி யேன் என்று கேள்? சைகிள் வருப்; சைகிள் ஏன், என்று கேள்? மோட்டார் வரும்; மோட்டார் ஏன் என்று கேள்? ஆகாயக் கப்பல் வரும். ஆகாயக் கப்பல் ஏன் என்று கேள்? V2 வரும்.

இவன் ஏன் இப்படி யிருக்கின்கின்றான்? பசி, பசி! ஏன் வந்தது? உணவில்லாமையால். உணவு ஏன் இல்லை? உணவு சரியாக பங்கிடப்படவில்லை! அதிகாரியின் கோளாறு. அதிகாரிக்கு ஏன் கோளாறு? ஆட்சி முறை சரியாயில்லை. ஆட்சிமுறை ஏன் சரியாயில்லை? அரசின் அசட்டுத்தனம். அரசுக்கு ஏன் அசட்டுத்தனம்! மக்களை மாக்களாகக் கருதுகிற மடமை. மடமை ஏன் வந்தது? மமதையால், மமதை ஏன் வந்தது! தட்டிக் கேள்க்க ஆளில்லாததால், ஆட்கள் ஏன் சேரவில்லை? அரசிடம் உள்ள பயத்தால். பயம் ஏன் வந்தது? படிக்காததால். படிப்பு ஏன் இல்லை? பணமில்லாததால்? பணம் ஏன் இல்லை? உழைப்புகேற்ற ஊதியம் பெறாததால். ஊதியம் ஏன் இல்லை? கட்டுப்பாடான முதலாளிகள் பிடிவாதத்தால், கட்டுப்பாடான முதலாளிகள் யார்? ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர். இன்னும் ஏன் அவர்கள் மாறவில்லை? மன்னன் படைக்கலப்பாது காப்பால். விதி, மரண தண்டனை. மன்னன் ஜாருக்கும் மகாராணி ஜாரினாவுக்கும். இது அங்கு. சைபீரியப் பாலைவனங்களிலே இருகையும் பின் கட்டி உலாவிக்கொண்டிருந்தபோது ஏன் என்ற கேள்வியை எழுப்பிய உத்தமன் லெனின் கண்ட விடைகள். குழந்தைக்கு பால் கொடுக்க தன் மனைவியை வேண்டியபோது, பால் கொடுக்க, பாலுக்குப் பதில் கொங்கையில் இரத்தம் வரக்கண்ட மண்பொதுத் தந்தையாம் காரல் மார்க்சின் கண்களிலே பறந்த தீப்பொறிகள். செண்ட் பீடர்ஸ் பர்க் சிறைச்சாலையிலே லெனின் கண்ட கனவுகள்.

ஏன் என்று கேள்க்காதே. நம்பு. நம்பினால் மோட்சம். நம்பாவிட்டால் நரகம். ஆம் என்று சொல். அடைத்துவை அறிவுக் கதவுகளை. 'பல்லுக்கு பல் இருகாதம் பல்லிடுக்கு முக்காதம்' ஆமாமாம். 'முழிக்குமுழி முக்காதம் மூக்குயரம் மூன்று பனை' ஆமாமம். 'காலிரெண்டும் காவேரி கைகள் ரெண்டும் வட பெண்ணை' ஆமாமாம். 'உதடு ரெண்டும் இமயகிரி, உள்ளங்காலு வீராணத்து ஏரி' ஆமாமாம்.

பிளளைக் கறி வேணும் பக்தா. கொடுத்தேன். கண்கள் வேண்டும் கண்ணப்பா. எடுத்துக்கொள்ளுங்கள். ~~மனைவி வேண்டும் இயற்பகையே~~ எல்லாம் உங்களால் படைக்கப்பட்டது. என்னைக் கேள்ப்பானேன். மூவடி மண் வேண்டி ஈரடியால் உலகளந்தேன், மற்றோர் அடி எங்கே வைப்பது? இதோ என் சிரம் மன்னர் மன்னன் சிபி. வேதியரே வேண்டாம், குருதி சிந்த நான் சித்தம் சோர்ந்தேனில்லை. ஆனால் உங்கள் அன்றலர்ந்த தாமரைப் போன்ற கைகள் வலிக்குமே, 'நந்தன்'. என்னுயிரவரை கழுவேற்று, தங்கள் சித்தம் அடியேன் பாக்கியம் 'நிறை நின்ற' சீர்நெடு மாறப்பாண்டியன் இங்கு.

நீ பலம் பொருந்திய வல்லரசாயிருக்கும் வரை யாருக்கும் அடிமையாகமாட்டாய் அகில உலக வல்லரசுகள் மேடையில் நீ இரண்டாவது இடம் பெறமாட்டாய். பெட்ரண்ட் ரசூல். அங்கு.

'கடவுளை நம்பிக் கடமையை செய். காலம் உன்னை மாற்றும்; இராம ராஜ்யம் உதயமாகும் காந்தியார். இங்கு.

"இந்தியனே என்னுடைசிக் கடிமை படு. நீ எடுப்பார் கைப்பாவை. இனப்பற்றில்லை. வாழ்வில் முன்னேற்றமில்லை. காரணம் வகை

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்

# "உதயம் தோன்றிவிட்டது"

[தில்லை. வில்லாளன்]

வா, உதயமே! வா!

வாழ்க்கையின் இருட் கதவுகளைப்
பிளந்தெறிய ஓடி வா

உதயத்தைப் பற்றி உவகையைக் கொட்டி, உள்ளக் கிளர்ச்சியை திருப்புகிற நேரத்தில் எத்தனை உதயங்கள். எண்ணிடும் தன்மை படைத்தோர் உள்ளங்களை நிறைக்கின்றன! உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொருவகை உதயம் உயிர்களை வாட்டியும், வாழ்த்தியும் வருவதையும் பார்க்கலாம்.

அன்பர் அருணாசலம் முதலியார் சைவ மெய்யன்பர். அவருக்கு அடிக்கடி உதயமாவது ஆண்டவன் நடராசனின் தூக்கிய பாதமும், எடுத்த கரமும் உமிழும் அழகு தரன், கோயில்களில் ஆண்டவ தரிசனம் நடத்துகையில்! கிரகத்திலே இருக்கும் அவரது அன்பிற்குரிய மனைவி மரகதம்மாளுக்கு உதயமாவது நடராசனின் நடன அழகல்ல, அவன் அணிந்திருக்கும் அணிவகைகளின் அமைப்பும், மதிப்பும், அதுமட்டுமல்ல பக்கத்து நிற்கும் உமைக்கு உடுத்தியிருக்கும் சரிகைப் புடவையில் "பார்டரி"லுள்ள சரிகையின் பளபளப்பும், பரப்பும்! இவர்களின் மகள் சாரதாவுக்கு உதயமாவது அம்மன் நகை வகையல்ல, பக்கத்து நிற்கும் பரிமளாவின் டோலாக்கும், போட்டிருக்கும் ஜாக்கட்டின் கை வைத்திருக்கும் முறையும் தான்! மகன் மருதவாணனுக்கு உதிப்பது காண்பவர் முகமெல்லாம் தனது காதலி கண்ணம்மாவினது முகமாகத்தான். சிறுவன் பாலனுக்கு கேட்பது தூரத்திலேநிற்கும் "மேள வண்டி"யின் ஒலி,மனத்தில் தோன்றி மறைவது அதன் தோற்றம், சிறுமி ஜெயாவுக்குத் தோன்றுவது பூக்கடையும், அதற்குப் பக்கத்திலே இருக்கும் "நியூமாடல் ரெடிமேட் ஷாப்பின் வெளிப்புறமும்! ஏன் அங்குதான் பட்டுப் பாவாடைகள் கட்டித் தொங்கவிடப் பட்டுள்ளன. ஒரே குடும்பம், அதில் இத்தனை ரக "உதயங்கள்"!

ஒரு நாட்டியக் கனியைக் கேளுங்கள். அவள் சொல்லுவாள் "தனது ஆடலரங்குகளின் ஆட்டங்கள் தான் அடிக்கடித் தோன்றுகின்றன" என்று ஒரு இசைவாணனைக்கேளுங்கள். அவன் சொல்லுவான் "தனது உயர்ந்த கச்சேரி நடந்த அன்றைய நிகழ்ச்சிதான் நினைவில் உதிக்கின்றது" என்று ஏன்? எவரை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். அவரவர்கள் தங்கள் வாழ்க்கையிலே சிறந்த ஒன்றை அல்லது துன்பகரமான ஒரு செய்தியைத்தான் கூறுவார்கள். நினைவிலே நித்தநித்தம் நர்த்தனமாடும் நட வடிக்கையாக!

ஒரு வழக்கறிஞர் ஏன் வரதராசய்யர் "குமரப்பன் கொலை வழக்கு எவ்வளவு பயங்கரமானது" என்பார்.

டாக்டர் இராசன், அனைத "அமிர்தவல்லியை"த் தான் போய் பார்த்து வந்தபொழுது எவ்வளவு எண்ண அலைகள் எழுந்து அடங்கின என்றுதான் கூறுவார்.

ஆசிரியர் இராசாக்கண்ணு, தனது வகுப்பில் சேர்ந்த மாணவன் மணி பால் எத்தனை வகைப்படும் என்ற கேள்விக்கு பசும்பால், ஆட்டுப்பால் ........என்று கூறிடத் தொடங்கின பொழுது ஏற்பட்ட சிரிப்பைக் கூறுவார்.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு "உதயம்" ஏற்புடுவதுண்டு.

இந்த எண்ணத் தோற்றங்கள் காலத்தாலும் சூழ் நிலையாலும் மாறலாம். மாற்றிவிடவும் முடியும். எப்படி?

பக்கத்திலே கணவன் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறான். இன்னொரு புறத்தில் ஒரு குழந்தை பசியால் வாடி, விட்ட கண்ணீர் கன்னத்திலே கறையேற்படுத்திக் காய்ந்த படித்தூங்குகிறது. டாக்டருக்குக் கொட்டியழ பணமில்லை. வெளியில் சென்றாலோ கொடியகாற்று. "சோ" வென்ற மழை!

மிரள மிரள விழிக்கிறான். அவள் மனத்தில் உதயமானது என்ன? எதிர்காலத்தில் குழந்தையை இடுப்பிலேலந்தி இரந்து காப்பாரில்லாமல் செல்லும் காட்சிதானே!

ஆனால் அம்புஜத்தின் வாழ்க்கையின் வரலாற்று ஏட்டில் ஒரு பத்து பக்கம் முன்னால் தள்ளினால் ஒரு தோப்பு தென்படும். அவள் அங்கு தனித்திருந்தாள். மாலை ஆறு மணி அவன் வந்தான். வந்ததுதான் தாமதம் பாரடைப்பு ஏற்பட்டது. படுத்து விட்டான். அவள் "ஐயோ" என்று அலறினாள். ஆனால் அவன் சிரித்தான். மாரடைப்பு மில்லை, மண்ணாங்கட்டியுமில்லை! நடித்தான், நடுங்கினாள்! அதைக் கண்டு சிரித்தான். பிறகு எத்தனையோ எண்ணங்களை எழுப்பிக்கொண்டு இன்ப வெள்ளத்தில் நீராடினார்கள்.

அன்று அவர்களுக்கு தங்களுக்கு ஏற்படும் குழந்தை இன்பத்தின் அறுவடை என்றுதான் எண்ணினார்கள். ஆனால் இடைக்காற்று ஏற்பட்ட இடையூறு என்று எண்ணவில்லை.

புயலும் மழையும் ஏற்பட்டது. இருவரும் அதை வரவேற்றார்கள், வாழ்த்தினார்கள்! ஏன்? அது ஏற்படாவிட்டால் அவள் அவனை தழுவிக்கொள்வாளா? அவன் தான் அவளை அணைத்துக் கொள்வானா?

பாருங்கள் காலமும், சூழ்நிலையும் எவ்வளவு 'மந்திர ஜாலங்கள்" செய்கின்றன!

இவையெல்லாம் 'உதயத்தின் ஒரு பொருளுடைய விளக்கங்களாம்.

உதயம் என்ற சொல் ஒருவகை உடை உடுத்தி, அணி பூண்டு நடந்துவந்த நாடகம் முடிகிறது.

உதயம் தோன்றிவிட்டது!

தோன்றினால் என்ன? 'அதுகூட எல்லாருடைய எண்ணத்திலும் ஒரே நிகழ்ச்சியை எழுப்ப முடியவில்லை.

தனபால் செட்டிகாரு கோடிஸ்வரர். சொத்துண்டு பரந்த கடல் போல, பொருளுண்டு "இமயம்" போல, நல்ல மாளிகையுண்டு "டாஜ மகால் போல, சுற்றிவர "ரோல்ஸ்ராய்" கார் உண்டு, பக்கத்திலே சிங்காரிகள் உண்டு, அழகிய சிற்பங்கள்போல! அதுமட்டுமா? கலந்து கொள்ள "பார்ட்டிகள்"! வருடத்திற்கொரு "பட்டம்"! இராவ்பகதூர், பகல்பகதூர்கள்! அவருக்கு உதயம் நினைப்பூட்டுவது என்ன?

பொழுது புலர்ந்தது, மாலைவரும், மனோகரியின் மலர்ந்த முகமும், அவள் கையிலே இருக்கும் ஒயின் கோப்பையில் அது பிரதிபலிக்கும் அழகும் அனுபவிக்க உரியனவாய்க் கிடைக்கும் என்று நினைப்பான்.

சந்திரசேகர அய்யருக்கு உதயமானது உதிக்கும்; எண்ணம் சோமசுந்தரர் வீட்டுக் கல்யாணமும், குமரப்பக் கவுண்டர் கருமாதியும் தான்.

பள்ளிச் சிறார்களுக்கு உதயம் பள்ளிக்கூட மணியைத் தான் ஆட்டி அசைத்து ஒலிக்கச் செய்யும்,

ஆனால், உழைப்பாளிகளுக்கு உதயம் உழைப்பின் உருவமான கலப்பையைக் காட்டும் சிலருக்குக் களை வெட்டும் சத்தியைக் காட்டும். சிலருக்கு மரம் வெட்டும் கோடறியைக் காட்டும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்.


# உதயம்

மலர் 1 1—9—46 இதழ் 5


## வங்கப் படுகொலை

வங்கப் படுகொலை இந்திய சரித்திரத்திலே என்றும் மறையாத பங்கத்தையுண்டுபண்ணி விட்டது. நிரபராதிகளான ஆண், பெண், சிறுவர், சிறுமிகள் ஆயிரக்கணக்கில் கொலை செய்யப்பட்ட சம்பவம் எவர் மனத்தையும் கலங்கச் செய்யாமலிருக்க முடியாது. கோடிக்கணக்கில் பொருள் நஷ்டம் இது எவரையும் திடுக்கிடச் செய்யும். இவை ஏன் ஏற்பட்டது? யாரால் ஏற்பட்டது? என்பவற்றைக் குறித்து இது சமயம் நாம் ஆராயப் பிரியப் படவில்லை. நாம் இங்கு குறிப்பிடப் பிரியப்படுவதெல்லாம், இத்தகைய கோரசம்பவம் நடந்த சமயத்தில், உண்மையிலே நாட்டின் நலத்திலும் மக்களின் வாழ்விலும் அக்கரை யுடையவர்கள் போக்கு எவ்வாறு இருக்கிறது? இப்போக்கு நலன் தருமா? இதனுல் யாருக்கு நன்மை? என்பவைகளேயாகும்.

இவ்வாறு படுகொலை புரிந்து, வாளினுலும் ஈட்டியினுலும் ஒரு கொள்கையை நிலை நிறுத்திவிடலாம், ஒரு கட்சியை வளர்த்து விடலாம் என்று எவரும் கனவிலும் கருதமுடியாது. நவீன இயந்திர சாதனங்கள் அனைத்தையும் திரட்டி வைத்திருந்த நாஜி கட்சியும், பாசிசக் கட்சியும் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போன பிறகும் வாளையும், ஈட்டியையும் நம்பி எவராவது இருப்பார்களேயானுல் அவர்கள் கனவுலகில் வாழ்கிறார்கள் என்றுதான் கருதவேண்டும்.

அதிலும் உரிமைப் போராட்டத்தை நடத்தி வரும் மக்களை இத்தகைய முறைகளைக்கையாள்வதால் அடக்கிவிடலாம் என்று எண்ணுவது வெறும் அறியாமையேயாகும். உலக சரித்திரத்திலே, ஒரு போராட்டமாவது, இவ்வாறு பலாத்காரத்தினுல் அடக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்ட முடியாது. எனவே, கல்கத்தா சம்பவத்திற்கு யார் பொறுப்பாளியாக இருந்தாலும், அவர்கள் இதை முதலில் கவனத்தில் வைக்கவேண்டும். அதாவது, அவர்கள் கையாளும் முறை அவர்களுக்கே குழி வெட்டிக் கொள்வதாகும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

உண்மையாக, மனித இரத்தம் ஓடும் எவரும் இப்படு கொலையைக் கண்டு மனம் வருந்தாமலிருக்க முடியாது. இந்தச் சமயத்தில் கட்சிப் பிணக்குகளை தீர்த்துக்கொள்ளவோ பழிவாங்கு முறையிலோ, இச்சம்பவத்தை பயன் படுத்திக் கொள்வார்களேயானுல், அவர்களை, நாட்டின் நலத்தில் மக்கள் வாழ்வில் கருத்துடையவர்கள் பொறுப்புள்ளவர்கள் என்று எவரும் கருத முடியாது. ஆனுல், இன்று நாட்டில், நாட்டின் நலத்தில் அக்கரையும் பொறுப்பு முள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் தலைவர்களும் பத்திரிகைகளும் நடந்து கொள்ளும் போக்கு எதை விளக்குகிறது என்பதை சற்று நிதான புத்தியுடன் எண்ணிப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

அரசியலிலே மதத்தைப் புகுத்தியதின் விளைவு இக் கல்கத்தா சம்பவம். அரசியலில் மதம் தலைவிரித்தாடும் வரை இத்தகைய சம்பவங்கள் நடந்தே தீரும். அரசியல் வேறு; மதம் வேறு. எத்தகைய அரசியல் ஏற்பட்டாலும் மதம் பாதிக்கப்பட மாட்டாது; மத நம்பிக்கை அழிக்கப்பட மாட்டாது என்ற நிலை ஏற்படாதவரை, இத்தகைய சம்பவங்கள் நடக்காமல் இருக்க முடியாது. பிரிட்டிஷ் நாட்டு சரித்திரமே இதற்குப் போதிய சான்றளிக்கும்.

ஆகவே, இது போன்ற சம்பவங்கள் தடுக்கப்படவேண்டுமானுல், மக்கள் மனத்தில் உள்ள அவநம்பிக்கையொழிக்கப்படவேண்டும். இந் நாட்டுச் சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, மக்கள் மனத்தில் குடிகொண்டிருக்கிற கருத்துக்களை எடுத்துக்கொண்டாலும் சரி, ஒருவர்மீது ஒருவர் அவநம்பிக்கை பயம் கொள்ளுமாறு இருக்கிறதே யல்லாது நல்லெண்ணம் கொள்ளக்கூடிய முறையில் இருக்கிறதா என்பதை எண்ணிப்பாருங்கள்.

வாழ்க்கை முறை, பழக்க வழக்கம், நடையுடை பாவனை முதலியவைகள், ஒருவரை ஒருவர் நேசிக்கு முறையில் அமைந்திருக்கின்றனவா? வெறுப்பும், துவேஷமும், பகையும் கொள்ளச் செய்யக் கூடியவைகளாக வன்றோ இருக்கின்றன? இதை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டே வந்தால், முடிவுதான் எப்பொழுது என்றுதான் கேட்கிறோம்.

இன்றுள்ள நிலையில், இவ்வுபகண்டத்திற்கு ஜன நாயக முறைப்படி, ஒரே அரசாங்கத்தை ஏற்படுத்தி முடிவு கண்டுவிடலாம் என்று கருதுவது ஒன்றும் நம்பர் ஏமாற்றுதலேயாகும். அவரவர்கள் தனித்தனியாக வாழவிடுவது தான் சிறந்த முறை. பின்னர் இவர்களுக்குள் நம்பிக்கை தோன்றி இவர்களுக்குள்ளிருக்கும் வெறுப்பும் பகைமையும் நீங்கி நேசம் ஏற்பட்டால் ஒரே ஆட்சி வேண்டுமானுல் ஏற்படலாமே யல்லாது இவ்வாறு பலாத்காரத்தினுல் நிறுவி விடலாம் என்று எண்ணுவது நாட்டை படுமோசமான நிலைக்கே கொண்டு செல்லுவதாகும்.

கல்கத்தா சம்பவம் பற்றி நாட்டுத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் பத்திரிகைகளும் கட்டுப் பாடாக ஒரே ரீதியில் நடந்துகொள்வது ஒருநாளும் விரும்பக் கூடிய காரியமாகாது. இச்சம்பவத்திற்குப் பொறுப்பு ஒரு கட்சியின் மீதோ ஒரு தலைவரின் மீதோ சுமத்துவது நேர்மையும் நியாயமுமாகாது.

இதனுல், வெறுப்பும் பகைமையும் வளருமே யல்லாது, குறையாது. இதன் விளைவு இப்பொழுது நடந்ததைவிட மோசமான சம்பவம் தோன்ற உதவுமே யல்லாது நன்மை பயக்காது.

மேற்படி சம்பவம்பற்றி பாரபட்சமற்ற ஒரு கமிட்டியை நிறுவி விசாரணை நடத்தி, பிறகு முடிவு கட்டுவதுதான் நேர்மையாகும். அதற்

குள் ஒரு சார்பாக வெளிவரும் செய்திகளைக்கொண்டு முடிவு கூறுவது பெரும் தீங்கையே விளைவிக்கும். இதுவரை வெளிவந்துள்ள அறிக்கைகளையும் செய்திகளையும் பார்த்தால் பாரபட்சமற்ற முறையில் வெளி வந்தவைகள் என்று எண்ணுவதற்கில்லை. எனவே, இப்போக்கு மாறவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

ஏனெனில், இப்போக்கினால் நன்மையடைகிறவர் பிரிட்டிஷார்தான் இவ்வாறு ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு இருந்தால் தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நிலைத்திருக்க முடியும். இதுதான் அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் எதிர்பார்ப்பது. இவ்வுபகண்டம் பிரிட்டனுக்கு அடிமையானதற்கு காரணமும் இதுதான் என்பதை சரித்திரம் விளக்கும்.

இவ்வுப கண்டத்திலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திரம் கோருகின்றனர். அவரவர்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழ விரும்புகின்றனர். இது அவர்களது பிறப்புரிமை. இதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் துணிவு கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் ஒருவரை ஒருவர் அடக்கவோ ஒடுக்கவோ எண்ணப்படுமானால், இதற்குத் துணையாக பிரிட்டிஷார் உதவியை நாடப்படுமேயானால், என்றுதான் இவ்வுப கண்டம் சுதந்திரம் பெறுவது ?

எனவே, தனக்கு இரண்டு கண்ணும் போனாலும் சரி எதிரிக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும் என்ற நல்ல(?) எண்ணத்தைவிட்டு எல்லோரும் இன்புற்று வாழ பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

## எத்தனை நாளைக்கு?

ஒரு சிலரை ஒரு சிலகாலம் ஏமாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. இது பிரிட்டிஷ் சர்க்கார் விஷயத்தில் இப்பொழுது மெய்யாய் விட்டது. இவர்கள் இதுவரை பலரை பல காலம் ஏமாற்றி வந்தார்கள். எல்லோரையும் ஏககாலத்தில் ஏமாற்றலாம் என்று எண்ணுகிறார்கள். அது இப்பொழுது பயனற்று போய் விட்டது.

பொதுவாக உலகில் அவர்கள் நிலை அவ்வாறு இருக்கிறதென்றாலும் குறிப்பாக இந்தியாவில் பளிங்குபோல் விளங்குகிறது.

திராவிடர் கழகம், இவர்களது நன்றி கெட்ட தன்மையை யுணர்ந்து இவர்களளித்த பட்டங்களைத் துறக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தது. அதுபோல் முஸ்லிம் லீக்கும் முடிவு செய்தது. இப்பொழுது ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனமும் முடிவு செய்திருக்கிறது, பட்டங்களைத் துறப்பதென்றும் இனிமேல் பட்டங்களை யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும்.

சென்னை மேயரும் ஷெடியூல்டு வகுப்புச் சம்மேளனத்தின் தலைவருமான 'திவான் பகதூர்' N. சிவராஜ் அவர்கள் தமது பட்டத்தைத் துறந்துவிட்டு தோழர் சிவராஜ் ஆனார் என்ற செய்தியை யறிய மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறோம்.

எத்தனை நாளைக்கு பிரிட்டிஷாரின் ஏமாற்றுதலுக்கு ஆளாகிக் கிடப்பது? பிரிட்டிஷாரின் பேச்சு வார்த்தையை நம்பியிருந்தால் சுதந்திரத்தை-உரிமையைப் பெறமுடியாது என்பது இப்பொழுது வெட்ட வெளிச்சமாய் விட்டது. எனவே, அவரவர்கள் தங்கள் தங்கள் சுதந்திரத்திற்காக அவரவர்களே போராட வேண்டிய காலம் நெருங்கி விட்டது. தளபதிகள் கிளம்பி விட்டார்கள். இனி படைதிரட்டப் படவேண்டியது தான் பாக்கியிருக்கிறது. உரிமைப் போராட்டத்தில் நின்று போராடுகிறவர்கள் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்காகவும் ஒற்றுமையுடனும் இருப்பார்களேயானால் வெற்றி நிச்சயம் கிட்டும்.

எனவே, 10 கோடி ஷெடியூல்டு வகுப்பு மக்களும் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப்பயன் படுத்தி வெற்றிபெற போராட முன் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

ஷெடியூல்டு வகுப்பு மக்கள் பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறையிலும் மிகப் பின்னணியிலிருப்பவர்கள். மற்ற இன மக்களுக்கிருக்கிற சௌகரியங்கள் இவர்களுக்கில்லை. இவர்கள் போராட்டம் மிகக்கடினமானது. ஆதலால் உரிமைக்காகப் போராடும் மற்ற இனமக்களும் இவர்களது உரிமைப் போராட்டத்தைச் சேர்த்து நடத்தினால்தான் வெற்றி எளிதில் காணலாம் என்று நம்புகின்றோம். எப்படியிருந்தாலும் வெற்றிகாணும் வரை போராட முன் வரவேண்டும் என்று ஒவ்வொரு ஷெடியூல்டு வகுப்பாரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம்

## நல்ல பாடம்

சேலம் அம்மாபேட்டை சில்லரை வியாபாரி கிருஷ்ண செட்டி என்பவர் சென்ற டிசம்பர் மாதம் ஒரு வீசை சர்க்கரையை சர்க்கார் நிர்ணய விலைக்கு அதிகமாக விற்றதாக தொடரப்பட்டவழக்கில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டால் ஒருமாத சிறை வாசமும் ரூ 200 அபராதமும் விதிக்கப்பட்டார். அப்பீல் செய்து கொள்ளப்பட்டதில், சேலம் செஷன் நீதிபதி ராவ்பகதூர் C. S. சௌத்ரி அவர்கள் கீழ்க்கோர்ட்டு தண்டனையை உறுதிப்படுத்தி தண்டனை காலத்தை ஒரு நாளாகவும் (சிறையில் இருந்த காலம்) அபராதத் தொகையை ரூ. 25 ஆகவும் குறைத்தார். அதுசமயம் நீதிபதி குறிப்பிட்டது பாராட்டக் கூடியதாகும். அதாவது.

இவரைப் போன்ற சிறு வியாபாரிக்கு அபராதமே போதுமானதாகும் இதுவே அவரது தவறை யுணரச் செய்யும்.

மோசமான வழக்குகளில் மாஜிஸ்திரேட் பெரும் வியாபாரிகளை வெறும் அபராதத்துடன் விட்டு விடுகையில், இவரைப் போன்ற சிறு வியாபாரிகளுக்கு தண்டனையும் அபராதமும் விதிக்கப் படுவது உண்மையிலே நீதியை கேலி பண்ணுவதாகவே யாகும். பெரும் வியாபாரிகளுக்கு அபராதம் எம்மாத்திரம? அபராதம் அவர்களைத்திருத்தி விடுமா? இவரைப்போன்றசிறு வியாபாரிகளுக்கு அபராத மொன்றே போதும் திருத்துவதற்கு.

கள்ள மார்க்கட்டையும் கொள்ளை லாபத்தையும் தடுக்க கடுந்தண்டனை விதிக்கப்பட வேண்டியதுதான், எப்பொழுது? அபராதத்தால் மட்டும் பயனில்லை யென்று கண்ட பிறகு. கொள்ளை லாபமடிப்பவர்களை கண்டு பிடித்தீ வழக்குத் தொடுத்தால் ஏதோ ஒரு தொகைதானே அபராதம் விதிப்பார்கள் அதைக்கட்டி விட்டால் போகிறது என்று கருதுகிற கொள்ளை லாபக்காரர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டியது அவசியமாகும்.

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இன்று நாட்டில் நாடோறும் நடக்கும் நிகழ்ச்சியைப் படம் பிடித்து காட்டியிருக்கிறார் நீதிபதி சௌத்ரி அவர்கள். இதை ஆங்காங்குள்ள நியாயம் வழங்கும் நியாயதிபதிகள் கவனித்து நடந்தால் நலம் பயக்கும் எந்த நோக்குடன் தண்டனை விதிக்க சட்டமியற்றப் பட்டதோ அந்த நோக்கமும் நிறைவேறும். எனவே, ராவ்பகதூர் சௌத்ரி அவர்கள் நல்ல பாடத்தை கற்றுக் கொடுத்திருக்கிறார் என்றே கருதுகின்றோம்.

குப்பன் உழவன். அவன் காலையைக் கண்டவுடன், கதிரவன் எழுங்காட்சியைப் பார்த்தவுடன், களிபாடவிட்டான். கைகூப்புவான். அதுதான் அவன் கற்றுக்கொண்ட பாடம்! ஆனால் அவனுக்கு அந்த உதயம் ஒரு நல்ல ரசமானக் காட்சியைக்காட்டும். அது அவன் தோளில் கலப்பை, இடுப்பில் களைக்கொட்டு, கையில் ஒரு சிறுகுச்சி, எதிரில் இரு எருதுகள், இடையிடையே "ஏ" "ஏ" என்ற சப்தம்! இதைத்தான் மனத்திரையில் காட்டும்.

★ ★ ★

வெளியில் சென்றிருந்த நண்பன் நாயகம் திரும்பவும் வந்தான். "என்ன இது?" என்றான். காட்டினேன். படித்தான். "உதயத்தைப் பற்றியே ஒரு ஆராய்ச்சி செய்து விட்டாயே!" என்று கூறினேன். "போடா வீண் விகடம் செய்யாதே, மனதில் உதித்ததெல்லாம் எழுதினேன். அதை ஆராய்ச்சி என்கிறாயே!" என்றேன். "அது கிடக்கட்டும்! இப்பொழுது ஒன்று உதிக்கிறது, சில ஆண்டுகளுக்கு முன் ஒன்று உதயமானது அது என்ன? என்றான். நான் சொல்லத் தொடங்கினேன்.

இந்தியா என்ற இந்த பரந்த உபகண்டத்தில் அடிமை உதயமாயிற்று. அந்த அடிமை உதயமாவதற்கு முன்பு அந்நியர் ஆதிக்கம் உதயமாயிற்று!

ஆரியர் வந்தனர், வாழ்கின்றனர்!

கிரேக்கர் படையெடுத்தனர் பரவ
இல்லை!

பார்த்தியர் சண்டையிட்டனர்
ஆண்டனர்!

சாகர்கள் தண்டெடுத்தனர் மன்ன
ரானார்!

குஷானர் வென்றனர் மண்டலங்
கண்டனர்!

ஹூகர் குடியேறினர். இருக்கின்றனர்!

பார்சிகள் வந்தனர். அமோக வாழ்வு
கொண்டுள்ளனர்!

முகம்மதியர்புகுந்தனர்.போகவில்லை,
போக வேண்டியது மில்லை!

போர்த்துகிசியர் வியாபாரஞ்செய்ய

வந்தனர். மன்னராக முயன்றனர்
முடியவில்லை!

டச்சுக்காரர் அப்படித்தான், பிரஞ்சுக்
காரர் போட்டியோடுபட்டுப்போனர்!
ஆங்கிலர், ஆளுகின்றனர்!

இந்தியர் நுழைவு உதயமான நேரத்திலேதான் ஒரு பக்கத்தில் அடிமையின் அஸ்திவாரமும் பலப்பட்டே வந்தது. அது உருவான இடம் பிளாசி. அங்குதான் பெரும், பெரும் மன்னர் முடிகளை யெல்லாம் மண்ணுக்குள் தள்ளியது. "அசோகனும்," "அக்பனும்" மறைந்த இடம் அங்குதான்! சந்திரகுப்தனும் கனிஷ்கனும் மாண்ட இடம் அதுதான்! மௌரிய வம்சம்,', "குப்த வம்சம்," 'சோரி வம்சம்," "பாபா வம்சம்," "மகாராஷ்டிர வம்சம்" எல்லாவற்றையும் அழுகச் செய்து அகண்டாகார வாயிலடக்கிக்கொண்டது! சோழ, சேர, பாண்டிய, பல்லவ மெல்லாம் பழுச்சுக் காச்சிய எண்ணெயிலிட்டு பலகார வகைகளாகச் செய்து கொண்டது அங்குதான்!

அந்தப் பிளாசியில்தான் அடிமை உதயமாயிற்று. ஆனால் அது அரசியலில்! அது வரவர உயர்ந்த வகை வெகு விநோதம். சில இடங்களில் நட்பு, சில இடங்களில் வெறுப்பு விளர்த்து விட்டு சண்டை மூட்டுவர்; அம்மாதிரி எத்தனை வகைச் சண்டைகள்! கர்நாடக யுத்தம், மைசூர் சண்டைகள், மகாராஷ்டிரப் போர் என்று பலப் பல. இதிலேயே பல வகை முறைகள். இப்படியெல்லாம் வளர்ந்து ', அகில-இந்தியா அமைந்தது. ஆட்சிகொண்டனர் வெள்ளையர். இங்கிலாந்திலே வெற்றி உதயம். ஆனால் இங்கு வீழ்வு உதயம். சுமார் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட கதை இது!

பிளாசியிலே 1857ல்தோன்றியது அரசியல் அடிமைச் சூரியன்; அதே நோக்தில் பம்பாயிலே "சுரண்டல் யந்திரம்" தயாராகத் தொடங்கிற்று.

## உதயம்
சந்தா விபரம்:

உள்நாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 5—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 2—8—0 |
| தனிப்பிரதி சந்தா ரூ | 0—1—3 |

வெளிநாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 7—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 4—0—0 |

மானேஜர்,
"உதயம்"
திருவத்திபுரம். N. A.

இவற்றிற்கெல்லாம் மிகவும் பழமையாகக் கங்கக்கரையிலே ஒரு உதயம் ஏற்பட்டது. அதுதான் ஆத்மார்த்த அடிமை! கங்கைவாசிகள், கமண்டல மேந்திகள் மண்டலாதிபதிகளை மண்டியிடச் செய்த மாயாஜால அடிமை!

இரண்டிற்கும் இறப்புத் தொடங்கி விட்டது என்று சொல்லுகின்றனர். நாம் ஏன் சொல்லுவானேன்? சரித்திரம் சொல்லட்டும்!

1858 விக்டோரிய சாசனம்

1861-1892 இந்திய கௌன்சில்
சட்டம்

1909 மிண்டோ மார்லி சீர்
திருத்தம்.

1919 ஆகஸ்டு 20 மாண்டேகு
விளக்கம்.

1918 ஜூலை 8 மாண்டேகு
செம்ஸ் போர்டு சீர்திருத்தம்.

1919 டிசம்பர் 23 இந்திய அரசியல்
சட்டம் மன்னர் பிரகடனம்.

1921 பிப்ரவரி 29 மத்திய சட்டசபை; நரேந்திர மண்டலம்—கானாட்டுக் கோமகன் ஆரம்பித்து வைத்தார்.

1927 சைமன் கமிஷன்.

1929 இந்திய சமஸ்தானங்கள் பட்லர் கமிட்டி அறிக்கை.

1929 அக்டோபர் 31 குடியேற்ற நாட்டு அந்தஸ்து. இர்வின் அறிக்கை.

(தொடரும்)

## திருமண அழைப்பு

பெரியாரின் அண்ணார் வைத்திய வள்ளல் தோழர் E. V. கிருஷ்ணசாமி அவர்களின் திருமகன், திராவிட மாணவர் கழகத் தலைமை பூண்டு பணிபுரியும் தீரன்,

தோழர். **E. V. K. சம்பத்**

திருப்பத்தூர் வ்ழக்கறிஞர் தோழர். G. சாமி நாயுடு அவர்கள் திருக்குமாரி,

தோழியர் **சு.லோச்சனா** அம்மையாரை

வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளும் பதிவுத் திருமண விழா **15—9—46 ஞாயிறன்று** வடாற்காடு **திருப்பத்தூரில்** மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

சென்னை வழக்கறிஞரும், முன்னாள் அமைச்சருமான தோழர். S. முத்தையா முதலியார் அவர்கள் தலைமை வகிப்பார்.

பெரியார், வாழ்த்துரை பகர்வார் அன்பர்கள் வருக!

# அரசியல் கலம்பகம்

(புலவர் தேன்)

எட்டு, ஆருகிறது!

நாலு எட்டாகிறது!

சென்னைக் காங்கிரஸ் மந்திரிகள் "அட்வைசரி கவர்ன்மென்டே மேலானது" என்று பொதுமக்கள் கருதும்படி நடந்துகொள்வது வருந்தத்தக்கது.

மாதம் மூன்றாகும் முன்னமே 90 வேலை நிறுத்தங்களும், மதுரை முதலிய 10, 15 இடங்களில் எல்லையற்ற காலித்தனங்களும் நடந்துள்ளன. எந்தப்பக்கம் பார்த்தாலும் உணவு பஞ்சத்தாலும் சம்பளக் குறைவினாலும் மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர். இந்த நிலையை உடனே போக்க வேண்டிய ஏற்பாடுகளில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை நம் மந்திரி சபை! மாறாக உணவில் 10 அவுன்ஸை 8 அவுன்ஸாக்கி 8 அவுன்ஸையும் 6 அவுன்ஸாக்கிவிட யோசிக்கிறார்களாம் மந்திரிகள்! இந்த லக்ஷணத்தில் உள் நாட்டுப் பஞ்சு முதலிய மூலப் பொருள்களை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்வதையும் தடுக்க முன் வரவில்லை இவர்கள். பின் எதிலே முன் வந்தார்கள் என்றால் சம்பளத்தை அதிகமாக்கி வாங்கிக்கொள்ள முன் வந்ததுபோல, பொதுமக்களுக்குப் போடப்பட இருக்கும் பல வரிகளுக்குக் காரணமான கள் ஒழிப்புத் திட்டத்தை விஸ்தரிப்பதில் முன் வருகிறார்கள். அதுவும் தமிழ் நாட்டார் அனைவரின் வெறுப்புக்கும் பாத்திரமான சூழ்ச்சிக்கார பதவி மோகம் பிடித்த ஒரு கும்பலின் மிரட்டலுக்கு அஞ்சி முன் வருகிறார்கள். இந்த ஆட்சியில் பொது மக்களுடைய எண்ணத்திற்குப் புல்லளவும் மதிப்பு இல்லாமல் போய்விட்டது. சென்ற ஆச்சாரி மந்திரி சபையில் 4 ஜில்லா மதுவிலக்குக்கே 24 வரிகளும், பல பள்ளிக்கூடங்கள் மூடு விழாவும் வந்தன. அப்போது இத்தனை போர் நெருக்கடியும், கட்டுப்பாடும், பங்கிட்டு முறையும் பஞ்சமும் இல்லை. இவ்வளவும் உள்ள இப்போது பழையவரிகள் அதிகமாகி உள்ள இப்போது—மேலும் 4 ஜில்லா மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வருமானால் இன்னும் என்னென்ன வரிகள் பொதுமக்கள் முதுகெலும்பை ஒடிக்கக் காத்திருக்கின்றனவோ என்று பொதுமக்கள் அஞ்சி வருந்துவதில் வியப்பென்ன இருக்கிறது? இவ்வாண்டில் வரியில்லை என்று இனிமையாகக் கூறி "வரி போடப் போகிறோம்" என்று இப்போது கூறிவரும் மந்திரி சபை இதை எல்லாம் எங்கே கவனிக்கப்போகிறது?

2-ம் பக்கத் தொடர்ச்சி

யில்லை. நெல் விளைந்த நிலத்தில் தான் நிற்கின்றாய். ஆனால் உன் நெஞ்சில் புல் முளைத்திருக்கிறது. பட்டும் பட்டாடையும் செய்து தந்தது உனது நாடு, ஆனால் உன் மனமோ வெறுங்கட்டாந்தரை. ஆற்றல்மிககோர் உன் முதியோர். ஆரியத்தின் முன் தோற்றாய். வணிபத்தில் மிக்கோர் உன் முன்னவர். நீ அவைகளைக் காற்றில் பறக்க விட்டாய். உனக்கு அறிவு இருந்தது; ஆனால் அது மாற்றாந்தாயால் வளர்க்கப்பட்ட பிள்ளை, கைகள் விலங்கிடப்பட்ட சொரியன் போல் சிறையிலடைக் கப்பட்ட மனிதன் போல், கூண்டிலடைக் கப்பட்ட சுயேச்சையில்லா பறவை போல் வளர்க் கப்பட்டது. எதெற்கெடுத்தாலும் புரோகிதரைக் கேட்டே செய்ய வேண்டுமென்ற உன் அறிவு வளர இடமில்லை. ஒரு காலத்தில் உன் நாட்டுப் பொருள் ரோமாபுரிச் சந்தையில் விற்றதுண்டு. அன்று ஆட்சிக் குடையோனயிருந்தாய். கடலை தாண்டியும், தார்வேந்தரை யடக்கி திரைவாங்கினாய். விண்முட்ட பறந்தது உன் கொடி. இன்று நீ சாதாரண மனிதன். அதேபோல் எங்கள் நாட்டுப் பொருளும் உங்கள் நாட்டு சந்தையில் விற்றதுண்டு. அன்று நாங்கள் சாதாரண மனிதர்கள். ஆனால் இன்று நாங்கள் நாட்டுக் குடையோர். காரணமென்ன? உலக மாறுதல் மனிதனையும் மாற்று என்றென்னுகிறோம், நீ உலகம் மாறினாலும், உன் உளுத்துப்போன கொள்கைகள் மாறக் கூடாதென்ற பிடிவாதக்குட்டையில் பவனி வருகிறாய்.

உலகம் உருண்டையா, தட்டையா என்ற அறிஞன் கலிலேயோவின் ஆராய்ச்சி மிகுந்த காலமும் சிறிய கல் தரைக்கு முன்னே வருமா என்ற பைசா நகர சாய்ந்த கோபுர ஆராய்ச்சி, காலமும், வார்த்தையின் உண்மையை கண்டறி, என்ற சாக்ரடீசின் ஆராய்ச்சிக் காலமும், சிறிய வட்டம் பெரிய வட்டத்தில் அடங்கி இருக்கிறதா இல்லையா என்ற நியூடன் ஆராய்ச்சிகாலமும், நட்பா, நீதியா, நட்புக்கு நீதி தேவையா? நீதிக்கு நட்பு நங்கூரமா? என்ற அரிஸ்டாடல் ஆராய்ச்சிக் காலமும்; ஞானி ஞாலத்தையாண்டால் அஞ்ஞானம் ஒழிந்து அறிவு பெறுவார்கள் மக்கள், என்ற ப்ளேடோவின் ஆராய்ச்சிக் காலமும், ஆட்சிநேரம் போக எஞ்சிய நேரத்தில் குடிலமைத்து ஆண்டவன் அருள் தேடிநின்ற மார்கஸ் அரேலியஸ் காலமும், கிழை நாடுகளுக்கு கடல்வழி வகுத்துத் தந்த மார்கபோலோவின் கடல்வழி ஆராய்ச்சிக் காலமும், காட்டில் இலையைக் கிழிக்க, அதில் ஆட்டின் குரல் கேள்க்க, மனிதன் குரலை-பேச்சை பாட்டை, இசைத் கட்டில் பிடித்த மார்க்கோனி ஆராய்ச்சிக் காலமும், உலகமாறுதலின் அல்லது அசைவின் சின்னங்களே. இவற்றுள் ஒன்றாவது உங்கள் நாட்டிலுண்டா? என்று மேனாட்டான் ஏளனஞ்செய்ய, இரட்டைமாட்டு வண்டி முதல், உலக்கையும் உளிப்பிடியும் உரல் அம்மிவரை எதையுமே ஒரு சிறிதும் மாற்றாது மக்கள் நிறைந்த நாடென காணிச் சொல்லுவது தவிர வேறென்ன. எண்ணிப்பார். திராவிடா! உன் இதயம் துடிக்கும்.

யாரோ அங்கு இலைபோட்டு பரிமாறுகிறார்கள் என்றால், தொலை தூரம் ஓடும் விலை கொடுக்காபட்டி கலிகால கண்டிப ஐயங்கார் விட்ட சரடுக்கு மலைபோல் ஸ்தம்பித்து நின்றுவிட்டாயே மாஜி மண்டலமாண்ட மறத்தமிழா? இதுவா உன் வீரம்.

ஏறாத மடைக்கு ஏறுமா தண்ணீர் என்ற விஷயமறியாது; காணாத மோட்ச லோகத்திற்கு காய்கறி அனுப்பும் உன் அறிவு என்ன விலை, என்று கேள்க்கிறது அறிவு உலகம் பதில் சொல்.

புரியாத மந்திரத்தைப் புரிந்தபடி யசைத்தல், காணாத ஒன்றை கண்டபடி கண் சிமிட்டல், வணங்காத உனது முடி, வணங்கியதேன் வகையுரைப்பாய்? என்று வையம் கேள்க்கிறது. வகை சொல் வாலிப உலகமே. இதுதான் அங்குமிங்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் பழமையை படுத்தறிவால் புதை.


தன்மானத் தாலாட்டு — விலை 0 2 6

புரட்சிக்கவி பாரதிதாசன்,

திருவத்திபுரம் மாவண்ணு தேவராசன் இயற்றியது.

பார்ப்பனப் படுமோச விளக்கம் — விலை 0 3 0

புரட்சிக்கவி தந்த புதையல் — விலை 0 4 0

திருவத்திபுரம், மாவண்ணு தேவராசன் இயற்றியது.

தனிப்பிரதி வேண்டுவோர் (புத்தக விலையுடன்) 9பை தபால் தலை அனுப்புக

விலாசம்:—ஸ்ரீ இலக்ஷ்மீ நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ.ஆ.

# கல்கத்தா கலவரத்திற்கு யார் பொறுப்பாளி,?

## லியாகத் அலிகான் அறிக்கை

கல்கத்தாவில் சென்ற 16, 17, 18 தேதிகளில் நடந்த துக்ககரமான சம்பவம்பற்றி அகில இந்திய முஸ்லிம் லீக் காரியதரிசி தோழர் லியாகத் அலிகான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் காணப்படுவது:

"கல்கத்தாவில் சமீபத்தில் நடந்த சம்பவத்தைப்பற்றி நான் இதுவரை எதுவும் வெளியிடவில்லை. காரணம் முழுவிபரமும் தெரியவில்லை யென்பதுதான். நான் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்து வருவதால் கல்கத்தாவுக்கு நேரில் என்னால் போக முடியாதுபோய் விட்டது. எனவே, பொறுப்புள்ள கண்ணியமானவர்களைக்கொண்ட ஒரு கோஷ்டியை கல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் கல்கத்தா சென்று பலநாள் சுற்றித்திரிந்து உண்மையை விசாரித்தறிந்து வந்து என்னிடம் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். இது தவிர, கலவரம் நடந்த சமயத்தில் அங்கு இருந்த பல பிரமுகர்களைக் கண்டு பேசும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது.

இவைகளைக்கொண்டு நான் என்ன தெரிந்துகொண்டேன் என்றால், கல்கத்தாவில் முஸ்லீம்கள் நேரடி நடவடிக்கை தினத்தை சமாதானமாகவும் ஒழுங்காகவும் கொண்டாட உத்தேசித்திருந்தார்கள் என்பது சந்தேகத்துக் கிடமில்லாது தெரிய வருகிறது என்பது தான்.

எத்தகைய கலவரத்திற்கும் முஸ்லீம்கள் தயார் செய்யவில்லை. அது மட்டுமல்ல தற் காப்புடனும் கூட இல்லை.

ஹிந்து காங்கிரஸ்காரர்கள் பெரும் கலவரத்திற்குத் தயார் செய்து கொண்டார்கள். முன்னேற்பாடு செய்துகொண்டார்கள். ஏன் இவ்வாறு சொல்லுகிறேன் என்றால், சென்ற 16 தேதி காலை நகரத்தின் பல பகுதிகளில் மைதானத்தை நோக்கி அமைதியாகச் சென்று கொண்டிருந்த முஸ்லீம் ஊர்வலங்களின் மீது கற்களும் சோடாபுட்டிகளும் வீசப்பட்டன.

16ந்தேதி இரவு வரை ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்ட அடிபட்டவர்களில் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள் என்பதையும் ஆஸ்பத்திரி தஸ்தாவேஜுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இவைகளிலிருந்து கலவரத்திற்கு யார் காரணம்? தாக்கியவர்கள் யார்? என்பதையும் யறியலாம்.

லீக் மந்திரி சபை மீது வீண் பழி சுமத்தி அதை ஒழித்துவிடலாம் என்ற எண்ணத்தின் மீது இக் கலவரத்தைத் துவக்கியிருக்கவேண்டும்; அல்லது மத்தியில் நமது சர்க்கார் வருகிறது அதனால், நமது எதிரிகளை அழித்துவிடலாம் என்ற தைரியத்தின் மீது இதைத் துவக்கியிருக்க வேண்டும். கலவரம் நடந்ததிலிருந்து அவர்கள் செய்துவரும் பிரச்சாரமே போதும், லீக் மந்திரி சபையை கவிழ்க்க முன்னேற் பாட்டுடன் செய்த சூழ்ச்சி என்பதை விளக்க.

கல்கத்தாவில் நடந்த படுகொலை எவர் மனத்தையும் கலங்கச்செய்யும். இத்தகைய முறையைக் கையாள்வது முஸ்லிம் லீக்கின் நோக்கமல்ல.

திரு காந்தியார், இச் சம்பவத்திற்கு முஸ்லிம் லீக்தான் பொறுப்பு எனக் கருதும்படி அறிக்கை வெளியிட்டிருக்கிறார். ஒரு தலைபட்சமாக வெளிவந்த செய்திகளை வைத்துக் கொண்டு அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார். அவர் இவ்வாறு முடிவுக்கு வந்தது புதிதல்ல. இதற்கு முன் பல சமயங்களில் இவ்வாறு ஒரு தலைபட்சமான முடிவு செய்திருக்கிறார்.

அவர் ஹிந்துக்களிடம் பேசுவது அஹிம்சை ஆனால் அதன் விளைவு நேர்மாறானது.

கடந்த சில தினங்களில் பற்பல நகரங்களில் கலகம் நடந்ததாக வெளி வந்துள்ள செய்திகளில் முதலில் தாக்கியவர்கள் ஹிந்துக்கள் என்று காணப்படுவதை அவர் அறியாமல் இருக்க முடியுமா?

டில்லியில் நடந்தசென்ன? என்பதை அதிகாரப் பூர்வமாக திரு காந்தியார் விசாரணை செய்து பார்க்கட்டும். அப்பொழுது விளங்கும் நான் கூறுவதின் உண்மை. அரசியலில் மதத்தைப் புகுத்தியதின் விளைவாக இந்நாட்டு அரசியல் வாழ்வு எந்த கதியை யடைந்துகொண்டு போகிறது என்பதை அறிய திரு காந்தியாருக்கு இப்பொழுதாவது மனம் வருமா?

இன்று நாட்டில் காணப்படும் வகுப்பு மாச்சரியம் வளர்ந்து கொண்டே போனால், எந்த அளவுக்கு நாட்டைக்கொண்டு செல்லும் என்பதை அவர் எண்ணிப்பார்க்கட்டும்.

இவ்வாறு கலவரங்களினால் இரத்தத்தைச் சிந்தச் செய்வதினால், மீண்டும் ஹிந்து சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திவிடலாம் என்று எவரும் நினைக்கவேண்டாம். 10 கோடி முஸ்லிம்களும் இதை எதிர்த்தே திருவார்கள். 10 கோடி முஸ்லிம்களை வாளினாலோ, ஈட்டியினாலோ வீழ்த்திவிடலாம் அழித்து விடலாம் என்று எண்ணிவிட முடியாது.

காங்கரசாரின் இக்கொள்கையினால் இலாபமடைகிறவர்கள் பிரிட்டிஷார் தான் என்பதை கவனத்தில் வைக்கவேண்டும்.

பிரிட்டிஷ் உதவினால், தங்கள் எண்ணம் நிறைவேறும் என்று திரு காந்தியாரோ ஹிந்து காங்கிரஸ்காரர்களோ நினைப்பார்களேயானால், இந்த எண்ணம் அதிக நாளைக்கு நீடிக்காது என்பதை இப்பொழுதே கூறுகிறேன்.

சலகண்டாபுரம் பகுத்தறிவு நடிகர் கழகத்தாரால்
தலைவர் **பெரியார்**
தளபதி **அண்ணாத்துரை**
கவியரசர் **பாரதிதாசன்**
ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்டு, மூவரின்
பாராட்டையும் பெற்ற முதன்மையான நாடகம்;
பழங்கால இனப்போரைக் குறித்த பகுத்தறிவுச் சித்திரம்
சுவையுள்ள பேச்சும் பாட்டும் நிறைந்த கருத்தோவியம்

**வீரவாலி**

(ஆக்கியோன்: ப. கண்ணன்)
அழகிய புத்தகமாக அச்சாகிக்கொண்டிருக்கிறது.
விரைவில் கிடைக்கும்.
விவரங்கள்:—குயில் நிலையம்,
**581**, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

Edited, Published by M. Kandaswamy, Tiruvettipuram (N. A.) and Printed at the Sri Lakshmi Press at Tiruvettipuram by M. Vedapuri Mudaliar.